**COURT OF THE PRINCIPAL DISTRICT JUDGE,**
**KANNIYAKUMARI AT NAGERCOIL.**

03.07.2025

O.S. No. 276/2022

P.W. 1 **திரு. மணி**

சாட்சி மீண்டும் இன்று அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

**குறுக்கு விசாரணை (3 மற்றும் 5 ஆம் பிரதிவாதிகள் தரப்பில்) -**

நான் என்ன படித்துள்ளேன் என்றால் SSLC படித்துள்ளேன். எனக்கு தமிழ் மற்றும் ஆங்கிலம் எழுத மற்றும் படிக்க தொியும். மலையாளம் எனக்கு படிக்கவோ, எழுதவோ தொியாது. எனக்கு சுப்பிரமணி என்ற வேறு பெயர் உள்ளதா என்றால் இல்லை. நான் வாதி சங்கத்தின் ஒருங்கிணைப்பாளராக எப்போதிலிருந்து இருக்கிறேன் என்றால் 2010 லிருந்து இருக்கிறேன். அதற்கான நியமன ஆணை எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை, அதற்கான தீர்மானம் அலுவலகத்தில் உள்ளது. நான் வாதியின் மாவட்ட ஒருங்கிணைப்பாளராக எப்போதும் நியமிக்கப்படாததால்தான் அதற்கான ஆவண ஆதாரம் எதையும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் வாதி சங்கத்தின் மாவட்ட ஒருங்கணைப்பாளராக ஒரு நாளும் செயல்பட்டதல்ல என்றால் சரியல்ல. கன்னியாகுமரி வேத பாடசாலையில் எனக்கு எந்த பொறுப்பும் கிடையாது என்றால் சரியல்ல, உண்டு. அதில் எத்தனை குழந்தைகள் படிக்கிறது என்றால் தற்போது வேதபாடசாலை நடக்கவில்லை, 2005 வரையில் நடந்தது. அப்போது வேதபாட

சாலையில் யார் யார் ஆசிரியர்கள் என்றால் கிருஷ்ணமூர்த்தி வாத்தியார் ஆசிரியராக இருந்தார். கிருஷ்ணமூர்த்தி வாத்தியாரின் அப்பா பெயரோ, விலாசமோ எனக்கு தொியாது என்றால் சரிதான். கிருஷ்ணமூர்த்தி வாத்தியார் வேத பாட சாலையில் ஆசிரியராக பணிபுாிந்தார் என காட்டுவதற்கு எந்த ஆவணத்தையும் இந்த வழக்கிலோ, ஏற்கனவே தாக்கல் செய்த வழக்கிலோ தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அந்த சமயத்தில் எத்தனை பிள்ளைகள் வேதபாடசாலையில் படித்தது என்ற விவரமும் எனக்கு தொியாது என்றால் சரியல்ல, மூன்று பிள்ளைகள் படித்தன. அந்த மூன்று பிள்ளைகள் யார் என்றால் அது எனக்கு மறந்துவிட்டது. அந்த மூன்று பிள்ளைகள் படித்த கால கட்டம் என்ன என்றால் 2005 வரை படித்தார்கள். வாதி சங்கத்தில் மாவட்டஒருங்கணைப்பாளராக 2010 ஆம் ஆண்டில்தான் நியமிக்கப்பட்டதாக நான் சொல்லியுள்ளதால் 2005 க்கு முன்னர் எத்தனை பேர் படித்தார்கள், யார் படித்தார்கள் என்ற விவரம் எனக்கு நேரடியாக தொியாது என்றால் சரிதான். 14.06.2025 அன்று நடந்ததாக சொல்லும் நிர்வாக குழு கூட்டத்திற்கு நான் போனேனா என்றால் இல்லை. அந்த நிர்வாக குழு கூட்டத்திற்கு யார் யார் போனார்கள் என்ற விவரமும் எனக்கு தொியாது என்றால் சரியல்ல, அந்த தீர்மானத்தில் அந்த விவரம் குறிப்பிடப்பட்டுள்ளது. வா.சா.ஆ. 35 தீர்மான நகலில் வேதாந்தம் என்பவர் மட்டும் தான் கையொப்பம் செய்துள்ளார் என்றால் அது தீர்மான அசலை ஏற்கனவே நீதிமன்றத்தில் கொண்டு வந்து காட்டியுள்ளேன், அதில் அனைவரின் கையொப்பமும் உள்ளது. எனக்கு வாதி சங்கத்திற்காக சாட்சியம் அளிக்க உரிமை கிடையாது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள

மலையாளத்தில் உள்ள விவரங்கள் எனக்கு தொியாது என்றால் சரிதான், அதன் மொழிபெயர்ப்பு அத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. அந்த மொழிபெயர்ப்பு சரியான மொழிபெயர்ப்பு அல்ல என்றால் சரியல்ல, அது மலையாளம் தொிந்தவர்களால் மொழி பெயர்க்கப்பட்டள்ளது. அந்த மொழிபெயர்ப்பில் அதை யார் மொழி பெயர்த்தார்கள், எப்போது மொழி பெயர்த்தார்கள் என்ற விவரமோ, மொழி பெயர்த்தவரின் கையொப்பமோ இல்லை என்றால் சரிதான்.

வா.சா.ஆ. 1 ஆவணம் வெங்கடாச்சல ஐயர் உருவாக்கிய போலியான ஆவணம் என்றால் சரியல்ல. வா.சா.ஆ. 1 ஆவணத்தின் மலையாள வாசகங்களில் கன்னியாகுமரி பகுதியில் சர்வே த 1 ல் 31 ம் கீழ் நம்பரில் தா 11 ம் எனவும், 122 நம்பரில் 15 ம், இதன் வண்ணம் 37 சென்ட் ஸ்தலம் பதிக்கேண்டதாயி கண்டு இனமாகி பகவதி பிள்ளை கொச்சம்மையின் பேரில் பதிக்குன்னதன்னே எழுதி அயச்சிருக்குந்தாயி என்றுதான் சொல்லப்பட்டள்ளது என்றாலும் அதற்கு சரியான மொழிபெயர்ப்பு பத்திரம் பதிவு செய்ய வேண்டும் என்றுதான் எடுத்துக் கொள்ள வேண்டுமே தவிர பதிவு செய்து விட்டதாக எடுத்துக் கொள்ள முடியாது என்றால் அது குறித்து எனக்கு தொியாது.

வா.சா.ஆ. 2 ஆவணத்திலும், வா.சா.ஆ. 1 போலவே பதிவு செய்ய வேண்டும் என்றுதான் எழுதப்பட்டுள்ளது தவிர பதிவு செய்துவிட்டதாக எழுதப்படவில்லை என்றால் அது குறித்து எனக்கு தொியாது. மேலும் அவ்வாறு பதிவு செய்துவிட்டு, உடன் விவரத்தை திவானுக்கு ரிப்போர்ட் செய்ய வேண்டும் என்று அதில் உள்ளது என்றால் அது குறித்து எனக்கு தொியாது. வா.சா.ஆ. 1 மற்றும்

2 ஆவணங்கள் எப்போது பெறப்பட்டது என்று எனக்கு தொியாது என்றால் சரிதான். அந்த ஆவணங்களில் அசல் ஆவணங்களிலிருந்து யார் நகல் எடுத்தது, யார் அதை சரி பார்த்தது போன்ற விவரங்கள் எனக்கு தொியாது என்றால் சரிதான். வா.சா.ஆ. 3 ஆவணம் யார் யாருக்கு எழுதியது என்றால் அது குறித்து எனக்கு தொியாது. கன்னியாகுமரியில் ராஜாவின் கொட்டாரம் எங்கு உள்ளது என்றால் கன்னியாகுமரியில் கொட்டாரம் இல்லை. கன்னியாகுமரியில் ராஜாவின் அம்ம வீடு உள்ளதா என்றால் உள்ளது. அது எங்கே உள்ளது என்றால் நாங்கள் வழக்கு சொத்துதான் அந்த வீடு. வேதபாட சாலை நடந்ததாக சொல்லப்படும் வீடுதான் அம்ம வீடு என்பதற்கு ஆதாரம் எதுவும் உள்ளதா என்றால் இல்லை, கேள்விபட்டதைதான் சொன்னேன். தாவா சொத்து அம்ம வீடு கிடையாது என்றாலும் நான் தவறாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. வா.சா.ஆ. 1 முதல் 3 வரையுள்ள ஆவணங்கள் வெங்கடாச்சலம் ஐயரால் அப்போது இருந்த அலுவலர்களிடமிருந்து போலியாக பெற்ற ஆவணங்கள் என்றால் சரியல்ல. வெங்கடாச்சலம் ஐயர் எத்தனை வருடங்கள் வாதியின் சங்கத்தில் பதவியில் இருந்தார் என்றால் 1981 லிருந்து 2006 வரை இருந்தார். வெங்கடாச்சலம் ஐயர் அவ்வாறு பதவியில் இருந்தார் என எனக்கு நேரடியாக தொியாது என்றால் சரியல்ல, தொியும் அவருடன் வேலை செய்தேன். எந்த வருடத்திலிருந்து வேலை பார்த்தேன் என்றால் 2003 லிருந்து பார்த்தேன். நான் பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. அந்த விவரம் நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். பிரமாண வாக்குமூலத்தை தயார் செய்வதற்கு வழக்கறிஞருக்கு விவரம் சொன்னது யார்

என்றால் நிர்வாக குழுவிலிருந்து சொல்லியிருப்பார். அவ்வாறு நிர்வாக குழுவினர் சொல்லி பிரமாண வாக்குமூலம் தயார் செய்ததாக அந்த பிரமாண வாக்குமூலத்தில் இல்லை என்றால் சரிதான். அந்த பட்டிகை சொத்தில் பிள்ளையார் கோவில் உள்ளது என்றால் கோவில் இல்லை, சிலை உள்ளது. நான் இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட எல்லா ஆவணங்களையும் நான் படித்து பார்த்துதான் தாக்கல் செய்தேனா என்றால் ஆமாம். வா.சா.ஆ. 4 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள 12.04.1948 அன்று எழுதப்பட்டதாக உடன்படிக்கை யாரெல்லாம் சேர்ந்து எழுதி கொடுத்தது என்றால் படித்துப் பார்த்துதான் சொல்ல முடியும். அந்த வா.சா.ஆ. 4 ஆவணத்தில் வேலாயுதம் தம்பிக்கு அதில் குறிப்பிட்டுள்ள சொத்துக்களுக்கு என்ன உரிமை என்று சொல்லப்படவில்லை என்றால் அது குறித்து எனக்கு தொ ியாது. வா.சா.ஆ. 4 ஆவணத்தில் எந்த சொத்து அவருக்கு ஒதுக்கப்பட்டதாக சொல்லப்பட்டுள்ள விவரம் எனக்கு தொ ியுமா என்றால் 11 வது பத்தியில் சொல்லப்பட்டுள்ளது. அந்த 11 வது பத்தியில் அந்த ஆவணத்தின் 2 கட்சியான பகவதி பிள்ளை தங்கச்சியும், ஜெயந்தி தங்கச்சியும் அந்த ஆவணத்தின் பட்டிகையில் சொல்லியுள்ள சொத்துக்கள் தவிர வேறு எந்த சொத்துக்களும் இல்லை என்றும் அந்த பட்டிகை சொத்துக்களை மட்டும்தான் இராமவர்ம ராஜா 1 வது கட்சியாக விட்டுக் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். வேலாயுத தம்பி நாயர் சமுதாயத்தை சார்ந்தவர் என்றால் அது எனக்கு தொ ியாது. வா.சா.ஆ. 4 ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 1 வது கட்சியான இராமவர்ம ராஜா புதுசேரி நாராயணன் நம்பூதிரியின் மகன் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ. 4 ஆவணத்தில் எந்த இடத்திலும் வேலாயுதம் தம்பிக்கு அந்த

பட்டிகை சொத்தில் உள்ள எந்த ஒரு பகுதியையும் கொடுத்ததாக குறிப்பிடப்படவில்லை என்றால் அது பற்றி எனக்கு தொியாது. அந்த விவரம் தொியாமலேயே இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் முழுமையாக படித்து பார்க்கவில்லை. வா.சா.ஆ. 4 ஆவணத்திற்கு பிறகு பகவதி பிள்ளை தங்கச்சியோ, ஜெயந்தி தங்கச்சியோ, வேலாயுதம் தம்பியோ அவர்களுக்கிடையே எந்த ஒரு பாகமும் பிாித்து கொள்ளவில்லை என்றால் அது பற்றி எனக்கு தொியாது. வா.சா.ஆ. 4 ல் 15 வது பத்தியில் சொல்லப்பட்டுள்ள 5 ஆம் பட்டிகை சொத்தான பண்டார ஒற்றி, லக்கம் 676, 678 சர்வே எண். 1231 ஏ 47 சென்ட் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தொியாது. அதற்கு 4 எல்கைகளாக மாம்பள்ளி விளாகமும், குழி விளாகமும் புரயிடங்களில் மேக்கு வசம் நால் பத்தி ஏழு சென்று வஸ்துவும், அதில் உள்ள கட்டிடங்கள் கிணர் முதலாயதும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தொியாது. வா.சா.ஆ. 4 ஆவணத்தில் வேலாயுதம் தம்பிக்கு எந்த ஒரு சொத்தும் ஒதுக்கப்படவில்லை என்றால் அது பற்றி எனக்கு தொியாது. புல எண் 1/1 ல் மொத்த விஸ்தீரணம் எத்தனை ஏக்கர் என்றால் 11 சென்ட். புல எண் 1/1 ல் மொத்த விஸ்தீரணம் 8 ஏக்கர் 17 சென்ட் என்றால் சரியல்ல. வா.சா.ஆ. 5 ஆவணத்தை படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்த்தேன். அது யார் யாருக்கு எழுதி கொடுத்த கிரயப் பத்திரம் என்றால் வெங்கடாச்சல ஐயருக்கு வேலாயுத தம்பி எழுதி கொடுத்த கிரயப் பத்திரம். வா.சா.ஆ. 5 ஆவணத்தில் பட்டிகையில் 8 ஏக்கர் 17 சென்டில் 11 சென்ட் மனை என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வா.சா.ஆ. 5 ஆவணத்தில் லெட்டர் 1/31 ல் 11

சென்றும், சர்வே எண். 122 ல் 2 ஏக்கர் 64 சென்றில் 15 சென்ட் என்றும் சேர்த்து 37 சென்ட் என குறிப்படப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ- 5 ஆவணத்தில் சர்வே எண் 1/1 ல் 8 ஏக்கர் 17 சென்டில் 11 சென்றும், சர்வே எண். 1/31 ல் 11 சென்றும், சர்வே எண். 122 ல் 2 ஏக்கர் 64 சென்றில் 15 சென்றும் என மொத்தம் 37 சென்ட் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த ஆவணத்தில் அந்த மூன்று பகுதிகளும் நான்கு எல்கைகள் குறிப்பிடப்படாமலும் எந்த திசையில் உள்ளது என்று குறிப்பிடப்படாமலும் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். 1981 க்கு முன்னர் வெங்கடாசலம் ஐயர் வாதி சங்கத்தில் பொறுப்பில் இல்லையா என்றால் இல்லை. வேலாயுதம் தம்பிக்கு தாவா சொத்து குறித்து எப்போது அனுபவம் கிடைத்தது என்று எனக்கு தொியுமா என்றால் வா.சா.ஆ. 4 பாக உடன்படிக்கை படி கிடைத்தது. வா.சா.ஆ. 4 பாக உடன்படிக்கையில் இந்த பட்டிகை சொத்து குறித்து எந்த இடத்திலும் வேலாயுதம் தம்பிக்கு கொடுப்பதாக திட்டப்படுத்தி குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். வேலாயுதம் தம்பியின் முன்னோர்கள் யார் என்றோ பகவதி பிள்ளை கொச்சம்மாவிற்குஅவர் எவ்வாறு வாரிசு ஆகிறார் என்ற விவரத்தை காட்டுவதற்கு அவர் வெங்கடாச்சலம் ஐயரிடம் ஏதாவது ஆவணம் கொடுத்துள்ளாரா என்றால் அது பற்றி எனக்கு தொியாது. வா.சா.ஆ. 5 ஆவணத்தில் முன் பத்திரங்கள் எதுவும் இல்லை என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தொியாது. பஞ்சாயத்து தீர்வை ரசீதுகள் வேலாயுதம் தம்பியின் பெயரில் இருந்தது என காட்டும் ஆவணங்கள் எதுவும் இல்லை என்றால் சரியல்ல, தாக்கல் செய்துள்ளோம். வா.சா.ஆ. 5 ல் யார் சாட்சி கையொப்பம் செய்துள்ளார்கள் என்றால் அது பற்றி எனக்கு

தொியாது. வா.சா.ஆ. 5 ஆவணத்தில் 1வது சாட்சியாக எழுதி கொடுத்த நபரின் பெரிய தகப்பனார் கேரள ஸ்டேட் ஆலகோடு வில்லேஜ் ஆலகோடு ஹவுசில், நாராயண நம்பூதிரி அவர்களின் மகன் ராமவர்ம ராஜா என்று சொன்னால் என்னால் மறுக்கமுடியுமா என்றால் அது யார் கையொப்பம் செய்தார் என்று எனக்கு தொியாது. வேலாயுத தம்பி நாயர் சமூகத்தை சேர்ந்தவர் என்றாலும் அவருடைய பெரிய தகப்பனாரின் மகன் ராமவர்ம ராஜா நம்பூதிாி சமூகத்தை சேர்ந்தவர் என்பதாலும் அந்த ஆவணமே போலியான கள்ளத்தனமான ஆவணம் என்றால் அது பற்றி எனக்கு தொியாது. வா.சா.ஆ. 5 ஆவணம் எங்கு பதிவு செய்யப்பட்டது என்றால் கொட்டாரம் சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டது. வா.சா.ஆ. 5 ஆவணத்தை எழுதி கொடுத்தது மகராஜா பிள்ளை மகன் சுப்பையா பிள்ளை என்றால் அது பற்றி எனக்கு தொியாது. மகராஜா பிள்ளை மகன் சுப்யைா பிள்ளை என்ற ஆவண எழுத்தர் பல போலி ஆவணங்களை தயார் செய்தார் என்பதற்காக கன்னியாகுமரி பதிவாளர் அலுவலகத்திலிருந்து நடவடிக்கை எடுத்து அவருடைய ஆவண எழுத்தர் உரிமத்தை ரத்து செய்தார் என்றால் அது பற்றி எனக்கு தொியாது. அவர் மீது நாகர்கோவிலில் பல நீதிமன்றங்களில் பல வழக்குகள் நடந்தது என்றால் அது குறித்து தொியாது. வெங்கடாச்சல ஐயர் உயிருடன் இருக்கிறாரா என்றால் இல்லை, 2008 ல் இறந்துவிட்டார். வா.சா.ஆ. 5 ஆவணத்தில் சாட்சி கையொப்பம்

போட்டுள்ள நபர்களை வாதி தரப்பு சாட்சியாக விசாரிக்க முடியுமா என்றால் முடியாது, அந்த ஆவணம் 1972 ல் ஏற்படுத்தப்பட்டது.

குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.